அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல:- 12/99

எனது இல: 8/11/2/81
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
1999..06.16......ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்டச் செயலாளர்களுக்கும்,
பிரதேச செயலாளர்களுக்கும்,

## வாழ்க்கை செலவுப் படி செலுத்துதல்

மேற்படி விடயத்துடன் தொடர்பான 1993.05.12 ஆந் திகதிய 10/93 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. 1993.01.01 ஆந் திகதிக்கு முன்னராக ஓய்வு பெற்றுள்ளவர்களும், கழிவுகள் செய்யப்படாத மாத ஓய்வூதியமாக ரூபா 4060/- அல்லது அதற்கு குறைந்த தொகை செலுத்தப்பட்டுள்ளவர்களுமான ஓய்வுக்காரர்கள் அனைவருக்கும் வாழ்க்கை செலவுப் படியாக ரூபா 260/- செலுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே அந்தப் படி செலுத்தப்பட்டுள்ள ஓய்வுக்காரர்களுக்கு இது ஏற்புடையவாகாது.

03. 1993.01.01 ஆந் திகதிக்குப் பின்னராக ஓய்வு பெற்ற, கழிவுகள் செய்யப்படாத மாத ஓய்வூதியமாக ரூபா 4060/- அல்லது அதற்குக் குறைந்த ஒரு தொகை செலுத்தப்பட்டுள்ள எல்லா ஓய்வுக்காரர்களுக்கும் இந்தப் படி வழங்கப்படும். ஏற்கனவே இந்தப் படி வழங்கப்பட்டுள்ள ஓய்வுக்காரர்கள் தொடர்பில் இது ஏற்புடையவாகாது.

04. 1988.01.01 திகதி முதல் 1996.12.31 ஆந் திகதி வரையிலான காலத்திற்கு நிலுவையாக உள்ள இவ் வாழ்க்கைச் செலவுப் படியை செலுத்த வேண்டும். 1988.01.01 ஆந் திகதியிலிருந்து ஒவ்வொரு மாதத்திற்காக கொடுபட வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1988 | ஜனவரி | - | ரூபா 156/- |
| | பெப்ரவரி | - | ரூபா 204/- |
| | மார்ச் | - | ரூபா 212/- |
| | ஏப்ரல் | - | ரூபா 204/- |
| | மே | - | ரூபா 222/- |
| | ஜூன் | - | ரூபா 240/- |

1988 ஜனவரி தொடக்கம் }
1996 டிசெம்பர் வரை } ரூபா 260 வீதம்

05. ஒவ்வொரு ஓய்வூக்காரர்களுக்கும் இந்தப் படியை செலுத்தும் போது அவர்கள் ஓய்வு பெற்ற திகதியை பரீட்சித்துப் பார்த்து மிக கவனத்துடன் செலுத்த வேண்டும். அதற்கு மேலதிகமாக இவ் விடயம் சம்பந்தமாக ஓய்வூதியப் பணிப்பாளர்களுக்கு இடையே வெளியிட்டுள்ள சுற்றறிக்கை மதியுரைகளையும் கவனத்திற் கொண்டு பார்கக வேண்டும்.

06. இதன் கீழ் கொடுப்பனவுகளுக்கு உரித்துடைய ஓய்வூக்காரர்களின் மாத ஓய்வூதியத்தை 2/97 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் படி வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பணிப்பாளரின் 1997.02.05 ஆந் திகதிய 01/97 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் 1997.01.01 ஆந் திகதியிலிருந்து திருத்தி கொடுப்பனவு செய்யவேண்டுமென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

07. இந்தப் படி தற்போது மாதாந்த ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற அலுவலகங்களின் மூலம் செலுத்தப்படும்.

08. பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

பி. ஏ. சேனாரட்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்
பெருந்தோட்டக் கைத்தொழில்
அமைச்சு.